**டிசம்பர் – 21**

# TNPSC துளிகள்

- கூகுள் நிறுவனம் ஆனது, வணிகர்களுக்கான பண வழங்கீடுகளுக்காக UPI மற்றும் Google Pay உடன் இணைக்கப்பட்டுள்ள தனது முதல் பற்று அட்டையை இந்தியாவில் அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்தியாவின் முதல் பிரத்தியேக வனப் பல்கலைக்கழகம் ஆனது உத்தரப் பிரதேச மாநிலத்தின் கோரக்பூரில் நிறுவப்பட உள்ளது.
- டெஸ்லா நிறுவனமானது, தனது முதல் மின்சார வாகன மின்னேற்ற நிலையத்தினை ஹரியானாவின் குருகிராமில் திறந்துள்ளது.
- AIIMS விஜய்பூர் வளாகத்தில் தனது முதல் மின்சார வாகன மின்னேற்ற நிலையத்தை திறந்துள்ளதுடன் ஜம்மு-காஷ்மீர் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.
- இந்தியக் கடற்படையானது, கோவாவில் உள்ள INS ஹன்சாவில் INAS 335 ‘Ospreys’ படைப் பிரிவை அதன் இரண்டாவது செயல்பாட்டுப் படைப்பிரிவான MH-60R பல்பயன்பாட்டு ஹெலிகாப்டர்கள் பிரிவில் இணைத்தது.
- இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் (UAE) ஆகியவை இணைந்து அபுதாபியில் டெசர்ட் சைக்ளோன்-II என்ற கூட்டு இராணுவப் பயிற்சியைத் தொடங்கியுள்ளன.
- பிரேசில் நாடானது 2026 ஆம் ஆண்டிற்கான BRICS அமைப்பின் (18வது) தலைமைப் பொறுப்பை இந்தியாவிடம் முறையாக ஒப்படைத்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது, "இந்திய மாநிலங்கள் குறித்த புள்ளி விவரக் கையேடு, 2024-25" என்ற அதன் 10வது புள்ளிவிவர அறிக்கையை வெளியிட்டது.
- ஜம்மு மற்றும் காஷ்மீர் ஆனது, அதன் முதல் சர்வதேச இந்திய பாணியிலான மல்யுத்த (டங்கல்) போட்டியை 2025 ஆம் ஆண்டு ருஸ்தம்-இ-ஜம்மு காஷ்மீர் போட்டி உடன் நடத்துகிறது.
    - இந்த சாம்பியன்ஷிப் போட்டியானது, பாரம்பரியமான டங்கல் மல்யுத்தத்தை மீட்டெடுத்தல், உடற்தகுதியை ஊக்குவித்தல், விளையாட்டு சார் சுற்றுலாவை மேம்படுத்துதல் மற்றும் உள்ளூர் திறமைகளை வெளிப்படுத்தச் செய்தல் ஆகிய பலவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஓமன் தனது மிக உயரியக் குடிமை விருதான ஃபர்ஸ்ட் கிளாஸ் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் ஓமன் விருதை பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கியுள்ளது என்பதோடு இதன் மூலம் இந்த விருதைப் பெற்ற முதல் இந்தியத் தலைவர் என்ற பெருமையை அவர் பெற்று உள்ளார்.
    - இது அவர் பெற்ற 29வது சர்வதேச விருதினைக் குறிக்கிறது.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## ஆர்டர்லி முறை ஒழிப்பு

- தமிழ்நாடு காவல் துறை தலைமை இயக்குநர் ஆர்டர்லி முறையை முழுமையாக நீக்க உத்தரவிட்டுள்ளார்.
- பணியில் உள்ள அல்லது ஓய்வு பெற்ற காவல்துறை அதிகாரிகளின் வீடுகளில் காவல் துறையினரை நியமிக்கக் கூடாது.
- சென்னை உயர் நீதிமன்றமானது அதிகாரப்பூர்வமற்றப் பணிகளுக்கு

ஆர்டர்லிகளைப் பயன்படுத்துவது சட்டத்திற்கு எதிரானது என்று தீர்ப்பளித்தது.

- 1979 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அரசு உத்தரவு, ஆர்டர்லி முறையை ஏற்கனவே ஒழித்திருந்தது.
- அனைத்து மூத்த நிலை காவல்துறை அதிகாரிகளும் இதற்கு முழுமையாக இணங்கச் செய்வதை மறுபரிசீலனை செய்து உறுதி செய்யுமாறு அறிவுறுத்தப் பட்டனர்.
- ஓர் அதிகாரியின் வீட்டில் காணப்படும் எந்தவொரு ஆர்டர்லியையும் உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்.




# தேசியச் செய்திகள்

## திருமண உறவிற்குள்ளான பாலியல் வன்கொடுமை குறித்த தனிநபர் மசோதா 2025

- காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் சசி தரூர் சமீபத்தில் குற்றவியல் சட்டத்தில் திருமண உறவிற்குள்ளான பாலியல் வன்கொடுமைக்கு உள்ள விதிவிலக்கை நீக்குவதற்காக மக்களவையில் ஒரு தனி நபர் உறுப்பினர் மசோதாவை அறிமுகப் படுத்தியுள்ளார்.
- அவர் பாராளுமன்றத்தின் கீழவையில் இரண்டு தனி நபர் உறுப்பினர் மசோதாக்களையும் அறிமுகப் படுத்தினார்.
    - 2020 ஆம் ஆண்டு தொழில் துறை பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணி நிலைமைகள் குறியீட்டினைத் திருத்துதல் மற்றும்
    - மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை மறுசீரமைப்பதற்காக மத்திய அரசுக்குப் பரிந்துரைக்க ஒரு மாநில மற்றும் ஒன்றியப் பிரதேச மறுசீரமைப்பு ஆணையத்தை நிறுவுதல்.
- ஒரு தனி நபர் உறுப்பினர் மசோதா என்பது அமைச்சராக இல்லாத ஓர் உறுப்பினர் (பாராளுமன்ற உறுப்பினர்) பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தும் ஒரு சட்ட முன் மொழிவாகும்.
- 14 தனி நபர் உறுப்பினர் மசோதாக்கள் மட்டுமே சட்டமாக நிறைவேற்றப்பட்டுள்ளன, என்ற நிலையில் 1970 ஆம் ஆண்டிலிருந்து இரு அவைகளாலும் தனி நபர் மசோதா எதுவும் நிறைவேற்றப்படவில்லை.
- பாரதிய நியாய சன்ஹிதா (BNS) பிரிவு 63, 2023 (IPC பிரிவு 375) - மனைவி 18 வயதுக்கு

மேற்பட்டவராக இருந்தால், திருமணப் பாலியல் வன்கொடுமை என்பது தண்டனைச் சட்டத்தின் கீழ் ஒரு குறிப்பிட்ட குற்றமாக கருதப்படாது.

- குடும்ப வன்முறையிலிருந்துப் பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் (2005) - திருமணப் பாலியல் வன்கொடுமை என்பது குடும்ப வன்முறையின் ஒரு வடிவமாகக் கருதப் படுகிறது என்பதோடு திருமணமற்றப் பாலியல் வன்கொடுமையை விட இலகுவான தண்டனையை அது பரிந்துரைக்கிறது.




## சர்வதேசச் செய்திகள்

### வெளிநாட்டுத் தீவிரவாத அமைப்பு - வெனிசுலா ஆட்சி


- அமெரிக்க அரசாங்கம் ஆனது, அதிபர் நிக்கோலஸ் மதுரோவின் வெனிசுலா ஆட்சியை ஒரு வெளிநாட்டுத் தீவிரவாத அமைப்பாக (FTO) நியமித்தது.
- தீவிரவாதம், போதைப்பொருள் கடத்தல், மனித கடத்தல் மற்றும் பிற சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கோளிட்டுள்ளது.
- அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாத நடுப்பகுதியில் இந்த அறிவிப்பினை அறிவித்தார்.
- இந்த அறிவிப்பு ஆனது, அதிகாரப்பூர்வ அறிக்கைகள் மற்றும் சமூக ஊடக உள்ளீடுகள் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்டது.
- ஆட்சிக்கு அழுத்தம் கொடுப்பதற்காக அமெரிக்கா தடை செய்யப்பட்ட வெனிசுலா

எண்ணெய்க் கப்பல்களை முற்றுகையிட கடற்படைக்கு உத்தரவிட்டது.

❖ இந்த அறிவிப்பானது, வெனிசுலாவுடன் தற்போதுள்ள அமெரிக்கத் தடைகள் மற்றும் அரசுமுறை உறவுகளின் பதட்டங்களை அதிகரித்தது.




## இஸ்ரேல்-எகிப்து இயற்கை எரிவாயு ஒப்பந்தம்




❖ இஸ்ரேல் மற்றும் எகிப்து இடையே சுமார் 34.6 பில்லியன் அமெரிக்க டாலர்கள் (USD)

மதிப்பிலான நீண்டகால இயற்கை எரிவாயு ஏற்றுமதி ஒப்பந்தம் கையெழுத்தானது.

- நியூமெட் எனர்ஜி எனும் இஸ்ரேலிய நிறுவனமானது எகிப்துக்கு சுமார் 130 பில்லியன் கன மீட்டர் இயற்கை எரிவாயுவை வழங்க உள்ளது.
- மத்திய தரைக் கடலில் உள்ள கடல் சார் எரிவாயு களங்களில் இருந்து எரிவாயு பெறப் படும்.
- எரிவாயுச் செயல்முறையாக்கம் மற்றும் விநியோகத்திற்கானப் பிராந்திய மையமாக எகிப்து செயல்படும்.

## வேளாண் கூட்டுறவுத் திட்டம் 2025–27

- இந்தியா மற்றும் அர்ஜென்டினா ஆகிய நாடுகள் 2025–27 ஆம் ஆண்டுகளுக்கான ICAR–INTA பணித் திட்டத்தில் கையெழுத்திட்டன.
- ICAR என்பது இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையையும், INTA என்பது அர்ஜென்டினாவின் தேசிய வேளாண் தொழில்நுட்ப நிறுவனத்தையும் குறிக்கிறது
- இந்தத் திட்டம் நிலையான வேளாண்மை, உயிரி தொழில்நுட்பம், டிஜிட்டல் வேளாண்மை மற்றும் கால்நடை மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- இந்தக் கூட்டுறவில் கூட்டு ஆராய்ச்சி திட்டங்கள், மரபணு வளப் பரிமாற்றம், நிபுணர் தொடர்புகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள் ஆகியவை அடங்கும்.
- பரிமாற்றத்திற்கான முக்கியப் பயிர்களில் சோயா அவரை, சூரியகாந்தி, மக்காச்சோளம், புளுபெர்ரி, சிட்ரஸ், கொய்யா மற்றும் காட்டுப் பப்பாளி இனங்கள் அடங்கும்.
- வருடாந்திரக் கண்காணிப்பு மற்றும் மறு ஆய்வுக் கூட்டங்கள் முன்னேற்றத்தைக் கண்காணித்து அதைத் திறம்படச் செயல்படுத்துவதை உறுதி செய்யும்.





## ஈரானில் நீர் நெருக்கடி 2025

- தனது நாட்டின் தலைநகரான தெஹ்ரான், மிகக் குறைவான நீர் மட்டங்கள்

காரணமாக மிகுந்த நெருக்கடியில் உள்ளதுடன், ஈரான் கடுமையான நீர்ப் பற்றாக் குறையை /நெருக்கடியை எதிர்கொள்கிறது.

- சுமார் 15 மில்லியன் மக்கள் வசிக்கும் தெஹ்ரானின் பெருநகரப் பகுதி, முற்றிலும் தண்ணீர் இல்லாமல் போகும் அபாயத்தில் உள்ளது.
- தெஹ்ரானுக்கு நீர் வழங்கும் லத்யன் அணை (9% தான் நிரம்பியுள்ளது), அமீர் கபீர் அணை (8% நிரம்பியுள்ளது) ஆகிய முக்கிய நீர்த்தேக்கங்கள் கிட்டத்தட்ட காலியாக உள்ளன என்ற நிலையில் ஒட்டுமொத்த நீர்த்தேக்கங்கள் சுமார் 11% கொள்ளளவில் உள்ளன.
- ஈரானின் இரண்டாவது பெரிய நகரமான மஷாத்தில், 3% கொள்ளளவு கொண்ட நீர்த் தேக்கங்கள் மட்டுமே உள்ளன என்ற நிலையில் இது சுமார் 3 மில்லியன் மக்களுக்கு நீர் விநியோகத்தில் அச்சுறுத்தலை எழுப்புகிறது.
- ஈரான், தண்ணீரை அதிகம் பயன்படுத்தும் தொழிற்சாலைகள் மற்றும் பெருகிவரும் நகர்ப்புற மக்கள்தொகையால், கடந்த 40 ஆண்டுகளில் மிகவும் மோசமானதாக, தொடர்ந்து ஆறு ஆண்டுகளாக வறட்சி நிலையை எதிர்கொண்டுள்ளது.
- விண்வெளியில் இருந்து காணும் போதே அங்கு தண்ணீர்ப் பற்றாக்குறை தெளிவாகப் புலப்படும் விதமாக உள்ளது என்ற நிலையில் இது அந்த நாடு முழுவதும் உள்ள நீர் நெருக்கடியின் அளவை எடுத்துக்காட்டுகிறது.
- அரிசி, கோதுமை மற்றும் பிற அதிகமான நீர்ப் பயன்பாடு மிக்க பயிர்கள் நீர்ப் பற்றாக்குறைக்கு பங்களித்துள்ளதனால், ஈரானின் நீரில் சுமார் 90% ஆனது வேளாண்மையில் பயன்படுத்தப் படுகிறது.
- ஈரானிய அதிகாரிகள் இப்போது தங்கள் தலைநகரை ஈரானின் தெற்கு மக்ரான் கடற்கரைக்கு அருகில் மக்ரான் நகரத்திற்கு மாற்ற முன்மொழிகின்றனர்.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## அல்சைமர் நோய்க்கான நுண்துகள் சிகிச்சை

- மொஹாலியில் உள்ள நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் (INST)

அறிவியலாளர்கள், அல்சைமர் சிகிச்சைக்கான நுண் துகள்கள் சார்ந்த வழி முறையை உருவாக்கியுள்ளனர்.

- இந்த ஆராய்ச்சி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் மேற்கொள்ளப் பட்டது.
- இந்த சிகிச்சையானது EGCG (எபிகல்லோகேடசின்-3-கேலேட்), டோபமைன் மற்றும் டிரிப்டோபான் ஆகியவற்றை ஒரு நுண் துகள்களில் இணைத்துப் பயன்படுத்துகிறது.
- இந்த நுண் துகள்கள் அமிலாய்டு பிளேக்குகள் (புரதப் படிவு நோய்க் காரணிகள்), ஆக்ஸிஜனேற்ற அழுத்தம், வீக்கம் மற்றும் நரம்பு செல் சேதத்தை இலக்காக குறி வைக்கின்றன.
- நியூரானின் வளர்ச்சி மற்றும் பழுதுபார்ப்பிற்கு உதவுவதற்காக மூளையில் இருந்து பெறப்பட்ட நியூரோட்ரோபிக் காரணி (BDNF) சேர்க்கப்பட்டது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## புதிய பாம்புத் தலை மீன் இனங்கள்: சன்னா போய்


- மேகாலயாவில் சன்னா போய் என்ற புதிய வகை பாம்புத் தலை மீனை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இது ரி-போய் மாவட்டத்தின் இயூமாவ்லாங் கிராமத்திற்கு அருகிலுள்ள ஒரு சிறிய மலை ஓடையில் கண்டறியப்பட்டது.
- இந்த இனத்திற்கு, இப்பகுதியில் உள்ள காசி பழங்குடியினரின் பூர்வீகக் குழுவான போய் மக்களின் பெயரிடப்பட்டது.
- சன்னா போய் ஆனது கிழக்கு இமயமலையில் அதிக பன்முகத் தன்மைக்குப் பெயர் பெற்ற பாம்புத் தலை மீன்களின் கச்சுவா குழுவைச் சேர்ந்தது.
- இன வரலாறு (பைலோஜெனடிக்) பகுப்பாய்வு இந்த இனம் சன்னா பிபுலியின் சகோதரி இனம் என்பதைக் காட்டுகிறது என்ற நிலையில் இது இந்தியாவின் மொத்தம் பதிவு

செய்யப்பட்ட சன்னா இனங்களின் எண்ணிக்கையை 26 ஆக உயர்த்தியுள்ளது.




## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### உலகளாவிய ஊக்க மருந்துப் பயன்பாட்டு மீறல்கள் குறித்த அறிக்கை 2025


INDIA HEADS LIST OF MAJOR NATIONS

Top 5 global offenders (2024)

| Countries | Samples | AAFs | (%) of dope offenders |
|---|---|---|---|
| India | 7,113 | 260 | 3.6 |
| France | 11,744 | 91 | 0.8 |
| Russia | 10,514 | 76 | 0.7 |
| Germany | 15,081 | 54 | 0.4 |
| China | 24,214 | 43 | 0.2 |
| India* | 7,068 | 110 | 1.5 |

*(2025, Until Dec 16)



- ❖ இந்த அறிக்கையை உலக ஊக்க மருந்து எதிர்ப்பு முகமை (WADA) வெளியிட்டது.
- ❖ இந்தியா தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக உலகில் மிக அதிக எண்ணிக்கையிலான ஊக்க மருந்துப் பயன்பாட்டு மீறல்கள் பதிவாகியுள்ளன.
- ❖ உலக ஊக்கமருந்து எதிர்ப்பு முகமை (WADA) ஆனது, 2024 ஆம் ஆண்டில் இந்திய

விளையாட்டு வீரர்கள் சம்பந்தப்பட்ட 260 ஊக்க மருந்துப் பயன்பாட்டு வழக்குகளைப் பதிவு செய்தது.

- இந்தியாவின் நேர்மறை விகிதம் 3.6 சதவீதமாக இருந்தது என்ற நிலையில் இது பெரிய அளவிலான சோதனைகளைக் கொண்ட நாடுகளில் மிக அதிகமாகும்.
- இந்தியாவின் தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு முகமை (NADA) இந்த ஆண்டில் 7,113 ஊக்க மருந்து சோதனைகளை நடத்தியது.
- பிரான்சு, ரஷ்யா, சீனா மற்றும் அமெரிக்கா போன்ற பிற நாடுகளில் ஒரு குறைவான மீறல்கள் பதிவாகின.

### BofA அறிக்கை 2025




- தினசரி மற்றும் மாதாந்திரச் செயலில் உள்ள பயனர்களால், AI செயலிகளுக்கான உலகின் மிகப்பெரிய சந்தையாக இந்தியா மாறியுள்ளது.
- இந்தத் தகவலைப் பாங்க் ஆஃப் அமெரிக்கா (BofA) செக்யூரிட்டீஸ் நிறுவனம் தனது சமீபத்திய அறிக்கையில் வெளியிட்டுள்ளது.
- இந்தியாவில் பரவலாகப் பயன்படுத்தப்படும் பிரபலமான AI செயலிகளில் ChatGPT, கூகுள், ஜெமினி மற்றும் Perplexity ஆகியவை அடங்கும்.
- அதிக திறன்பேசிப் பயன்பாடு மற்றும் குறைந்த விலை கைபேசி தரவு ஆகியவை இந்த வளர்ச்சியை ஆதரிப்பதாக அறிக்கை கூறுகிறது.
- அதிகரித்த AI செயலிப் பயன்பாடுகள் தொலைத் தொடர்பு சேவை வழங்குநர்களுக்கு ஒரு பயனருக்கான சராசரி வருவாய் (ARPU) அதிகரிக்க வழி வகுக்கும்.

## மாநிலச் செய்திகள்

### சட்டமன்ற உறுப்பினர்களின் சம்பள உயர்வு - ஒடிசா

- முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் மாத சம்பளத்தை மூன்று மடங்காக உயர்த்துவதற்கான மசோதாவை ஒடிசா மாநிலச் சட்டமன்றம் நிறைவேற்றியது.
- திருத்தப்பட்ட கட்டமைப்பின் கீழ், ஒரு சட்டமன்ற உறுப்பினர் மாதத்திற்கு 3.45 லட்சம் ரூபாய் பெறுவார் என்ற நிலையில் இது 2007 ஆம் ஆண்டில் 1.10 லட்சம் ரூபாயாக இருந்தது.
- முதலமைச்சரின் மாத சம்பளம் 3.74 லட்சம் ரூபாய் என்பதோடு இதில் 1 லட்சம் ரூபாய் சம்பளம், 91,000 ரூபாய் கார் பயன்பாடு சார்ந்த கொடுப்பனவு மற்றும் 1.83 லட்சம்

செலவுக் குறைப்பு கொடுப்பனவு ஆகியவை அடங்கும்.

- துணை முதல்வர் 3.68 லட்சம் ரூபாய், அமைச்சரவை அமைச்சர்கள் 3.62 லட்சம் ரூபாய் மற்றும் மாநில அமைச்சர்கள் மாதம் 3.56 லட்சம் ரூபாய் பெறுவார்கள்.
- சபாநாயகரின் சம்பளம் 3.68 லட்சம் ரூபாய், துணை சபாநாயகரின் சம்பளம் 3.56 லட்சம் ரூபாய், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அரசாங்கத் தலைமை கொறடாவின் சம்பளம் 3.62 லட்சம் ரூபாய் ஆகும்.
- ஒடிசாவின் தனி நபர் வருமானம் ஆண்டிற்கு 1,82,548 ரூபாய் ஆகும் என்பதோடு இது தேசிய சராசரியான 2,05,324 ரூபாயை விடக் குறைவாகும்.


HIKE PLAN

| Members | Existing | Proposed |
|---|---|---|
| CM | ₹98,000 | ₹3.74 lakh |
| Ministers | ₹97,000 | ₹3.58 lakh |
| MLAs | ₹92,000 | ₹3.40 lakh |

## மேற்கு வங்காளப் பல்கலைக்கழக மசோதாக்கள்




- மாநிலப் பல்கலைக்கழகங்களின் வேந்தராக முதல்வரை முன்மொழியும் மேற்கு வங்காள சட்டமன்ற திருத்த மசோதாவை இந்தியக் குடியரசுத் தலைவர் நிராகரித்து உள்ளார்.
- ஆளுநர் டாக்டர் C. V. போஸ் இந்த மசோதாவை 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் தேதி அன்று குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக ஒதுக்கியிருந்தார்.
- அலியா பல்கலைக்கழகம் தொடர்பான மற்றொரு திருத்த மசோதா, முதல்வரை அமீர்-


இ-ஜாமியா அல்லது வேந்தராக முன்மொழியும் மசோதாவும் நிராகரிக்கப்பட்டது.

- தற்போதுள்ள விதிகள் மாறாமல் உள்ளதுடன், தற்போதைய சட்ட கட்டமைப்பின் கீழ் ஆளுநர் வேந்தராக தொடர்கிறார்.
- இந்த மசோதாக்கள் ஆளுநருக்குப் பதிலாக முதல்வரை வேந்தராக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டிருந்தன, ஆனால் அந்த முன் மொழிவுகள் அங்கீகரிக்கப் பட வில்லை.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## ராம் சுதர் மறைவு

- புகழ்பெற்ற சிற்பி ராம் வஞ்சி சுதர் உத்தரப் பிரதேச மாநிலத்தின் நொய்டாவில் அவரது 100வது வயதில் காலமானார்.
- உலகின் மிக உயரமான சிலையான குஜராத்தில் உள்ள ஒற்றுமைக்கான சிலையின் முதன்மை வடிவமைப்பாளராக இவர் இருந்தார்.
- அவரது பிரபலமான படைப்புகளில் பாராளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி மற்றும் சத்ரபதி சிவாஜி சிலைகள் அடங்கும்.
- அவர் பத்மஸ்ரீ (1999) மற்றும் பத்ம பூஷண் (2016) விருதுகளைப் பெற்றுள்ளார்.
- மகாராஷ்டிராவின் மிகவும் உயர்ந்த குடிமை விருதான மகாராஷ்டிரா பூஷண் புரஸ்காரையும் அவர் பெற்றார்.




## மதிப்பு மிக்கப் பயண விருதுகள்

- ஏர் இந்தியா நிறுவனம் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக 2025 ஆம் ஆண்டு டிராவல் + லெஷர் இந்தியா & தெற்காசியா விருதுகளில் சிறந்த உள்நாட்டு விமான நிறுவன விருதினை வென்றது.
- இந்த விருது முற்றிலும் பயணிகள் வாக்குகளை அடிப்படையாகக் கொண்டது என்ற நிலையில் இது சேவையின் தரம், சௌகரியம், நம்பகத் தன்மை மற்றும் ஒட்டு மொத்தப் பயண அனுபவத்தைப் பிரதிபலிக்கிறது.

- ஏர் இந்தியா நிறுவனம் 570 புதிய விமானக் கொள்முதல்கள் மற்றும் 400 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான மறுசீரமைப்புத் திட்டம் உள்ளிட்ட ஒரு பெரிய மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது.
- அந்த விருதுகளில், உலகளாவியப் பயணிகள் வாக்குகளின் அடிப்படையில், சிங்கப்பூர் சாங்கி விமான நிலையம் 2025 ஆம் ஆண்டின் உலகின் சிறந்த சர்வதேச விமான நிலையமாக பெயரிடப்பட்டது.
- பயணிகள் சௌகரியம், புதுமையான வடிவமைப்பு, உள்ளகத் தோட்டங்கள், உலகின் மிக உயரமான உள்ளக நீர்வீழ்ச்சி மற்றும் கவனத்தை ஈர்க்கும் ஓய்வு மண்டலங்களுக்காக சாங்கி விமான நிலையம் இந்த விருதினைப் பெற்றுள்ளது.




# முக்கிய தினங்கள்

## சர்வதேசப் புலம்பெயர்ந்தோர் தினம் 2025 - டிசம்பர் 18




- புலம்பெயர்ந்தோரின் உரிமைகள் மற்றும் கண்ணியத்தைப் பாதுகாப்பதே இந்த நாளின் நோக்கமாகும்.

- இது 2000 ஆம் ஆண்டில் ஐ.நா. சபையினால் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.
- புலம்பெயர்ந்தோரின் பங்களிப்புகளையும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் அங்கீகரிப்பதற்காக இது கொண்டாடப்படுகிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "My Great Story: Cultures and Development" என்பதாகும்.

## சிறுபான்மையினர் உரிமைகள் தினம் 2025 - டிசம்பர் 18


- சிறுபான்மையினர் சமூகங்களின் உரிமைகளைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதே இந்த நாளின் நோக்கமாகும்.
- 1992 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் தேதியன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட ஐ.நா. பிரகடனத்தைத் தொடர்ந்து இந்த நாள் அனுசரிக்கப்பட்டது.
- சிறுபான்மையினரின் சமத்துவம், பாதுகாப்பு மற்றும் சமூக உள்ளடக்கத்தை ஊக்குவிப்பதற்காக இந்த நாள் கொண்டாடப் படுகிறது.




## உலக அரபு மொழி தினம் 2025 - டிசம்பர் 18

- அரபு மொழியின் முக்கியத்துவத்தையும் பயன்பாட்டையும் ஊக்குவிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1973 ஆம் ஆண்டில் அரபு மொழியானது ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரப் பூர்வ மொழியாக சேர்க்கப் பட்டதை இந்த நாள் குறிக்கிறது.
- இத்தினம் யுனெஸ்கோ அமைப்பினால் கொண்டாடப்படுகிறது.
- அரபு மொழி, 27க்கும் மேற்பட்ட நாடுகளில் ஓர் அதிகாரப்பூர்வ மொழியாக உள்ளது.
- அரபு மொழி உலகளவில் 550 மில்லியனுக்கும் அதிகமான மக்களின் தாய்மொழி ஆக உள்ளது.

- 2025 ஆம் ஆண்டிற்கான உலக அரபு மொழி தினத்திற்கான கருத்துரு, "Innovative Pathways for Arabic: Policies and Practices for a More Inclusive Linguistic Future" என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★